பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

18 05 2025 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைப்பதற்கான அனைத்துக் கட்சிக் குழுவில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 59 பேர் இடம்பெற்றுள்ளனர்.

2. இஸ்ரோவின் **PSLV-C61** ராக்கெட் திட்டம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தோல்வியடைந்தது.

3. பொதுப் பட்டியலில் உள்ள கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே நேரிட்ட சாலை விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் குறித்து எடுத்துரைப்பதற்காக அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 59 பேர் அடங்கிய 7 குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

பிஜேபியின் திரு. பைஜெயந்த் பாண்டா, திரு. ரவிசங்கர் பிரசாத், ஐக்கிய ஜனதாதளத்தின் திரு. சஞ்சய்குமார் ஜா, சிவசேனாவின் திரு. ஸ்ரீகாந்த் ஏக்நாத் ஷிண்டே, காங்கிரஸ் கட்சியின் திரு. சஷிதரூர், திமுகவின் திருமதி கனிமொழி கருணாநிதி, தேசியவாத காங்கிரசின் திருமதி சுப்ரியா சுலே ஆகியோர் குழு தலைவர்களாக இருப்பார்கள் என நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு தெரிவித்துள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர்கள் திரு. குலாம்நபி ஆசாத், திரு. அனுராக் தாக்கூர், திருமதி புரந்தேஸ்வரி, திரு. சல்மான் குர்ஷித், திரு. மணீஷ் திவாரி, திரு. ஆனந்த் சர்மா, திரு. ராஜீவ் பிரதாப் ரூடி, திரு. முரளிதரன் மற்றும் வெளியுறவுத்துறை அதிகாரிகள் இக்குழுக்களில் இடம்பெற்றுள்ளதாகவும் திரு. கிரண் ரிஜிஜு தமது சமூக வலைதளப் பதிவில் தெரிவித்துள்ளார்.

இந்த குழுவினர் அமெரிக்கா, ரஷ்யா, இங்கிலாந்து, ஃபிரான்ஸ், சவுதி அரேபியா, ஜப்பான், மலேசியா, தென்னாப்பிரிக்கா உள்ளிட்ட 33 நாடுகளுக்கு சென்று ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை குறித்து எடுத்துரைக்க உள்ளனர்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் வெற்றியைக் கொண்டாடும் வகையில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் பேரணி நடைபெற்றது.

கன்னியாகுமரியில் மாவட்ட பிஜேபி சார்பில் குமரி முனையில் உள்ள விவேகானந்தா கேந்திரம் முதல் காந்தி மண்டபம் வரை நடைபெற்ற பேரணியில் முன்னாள் மத்திய அமைச்சர் திரு. பொன் ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

விருதுநகரில் பிஜேபி மாவட்டத் தலைவர் திரு. பாண்டுரங்கன் தலைமையில் நடைபெற்ற பேரணியில் பிஜேபி, அஇஅதிமுகவினரும், இஸ்லாமிய பெண்கள் உள்ளிட்டோரும் பங்கேற்று பாரத் மாதா கி ஜே என முழக்கமிட்டனர்.

பேரணியில் நிறைவில் பாகிஸ்தான் தாக்குதலில் உயிரிழந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் பிஜேபி மாவட்டத் தலைவர் திரு. சரவணகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற பேரணி, நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்று, காந்தி மைதானத்தில் நிறைவடைந்தது.

ராமநாதபுரத்தில் நடைபெற்ற பேரணியில் பிஜேபி தொண்டர்கள் மற்றும் தேச பக்தர்கள் குழுவினர் திரளாகப் பங்கேற்றனர்.

மயிலாடுதுறையில் நடைபெற்ற பேரணியிலும் திரளான பிஜேபியனர் பங்கேற்றனர்.

<<<<>>>>

கோவையில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் நிறைவு விழாவில் மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் கலந்துகொண்டார்.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் நூற்றாண்டு விழாவையொட்டி கடந்த 2ஆம் தேதி தொடங்கிய இந்த 15 நாள் முகாம், நேற்று நிறைவடைந்தது.

இதில் யோகா, சிலம்பம், கராத்தே, விளையாட்டு, கோஷ் வாத்திய இசை போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்பட்டது.

<<<<>>>>

பொதுப் பட்டியலில் உள்ள கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்ற வேண்டும் என முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நாட்டில் மாநிலத்திற்கு மாநிலம் பண்பாடு மாறுபடுவதால், குழந்தைகள் எந்த மொழியில், எந்தப் பாடத்திட்டத்தில் படிக்க வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் மாநில அரசுகளுக்குத்தான் இருக்க வேண்டும் என்றார்.

தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளைப் பாதுகாக்க கல்வியை மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவது அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கையை தமிழக அரசு ஏற்காது என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

<<<<>>>>

இஸ்ரோவின் **PSLV-C61** ராக்கெட் திட்டம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தோல்வியடைந்தது.

புவி கண்காணிப்புக்கான **EOS-09** செயற்கைக்கோள், ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் ஏவுதளத்தில் இருந்து இன்று காலை மணி 5.59க்கு விண்ணில் செலுத்தப்பட்டது.

இஸ்ரோவின் 101வது ராக்கெட்டான **PSLV-C61**-ன் இரண்டு அடுக்குகள் வெற்றிகரமாக பிரிந்த நிலையில், 3வது அடுக்கு பிரிந்தபோது செயற்கைக்கோளை நிலைநிறுத்த முடியாமல் திட்டம் தோல்வியடைந்ததாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் ராசிபுரம், பரமத்திவேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம், புதுச்சத்திரம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்றிரவு பலத்த சூறைக் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது.

கொல்லிமலை அடிவாரத்தில் உள்ள நடுக்கோம்பை, காரவள்ளி, வெண்டாங்கி உள்ளிட்ட கிராமங்களில் சூறாவளிக் காற்றுடன் பெய்த மழையால் பாக்கு மரங்கள் முறிந்து விழுந்து சேதமடைந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வேலூர் மாவட்டத்தில் காட்பாடி, பள்ளிகொண்டா, வேலூர் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக பெய்த கனமழையால் இப்பகுதிகளில் வெப்பம் தணிந்து இதமான காற்று வீசியது.

ராணிப்பேட்டை மாவட்டத்திலும் நேற்று மாலையில் கனமழை பெய்துள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கள்வராயன்மலை உள்ளிட்ட பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்துள்ளது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளம் அருகே ஆம்னி வேன் ஒன்று சாலையோர கிணற்றுக்குள் விழுந்த விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

தஞ்சாவூரைச் சேர்ந்த 8 பேர் திருமண நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்பதற்காக இம்மாவட்டத்தில் உள்ள வெள்ளாளன்விளை பகுதிக்கு சென்றுகொண்டிருந்தபோது அவர்கள் பயணம் செய்த வாகனம் விபத்தில் சிக்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த விபத்து குறித்து ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித்துள்ளார்.

இதேபோன்று கரூர் மாவட்டம் சின்னவடுகப்பட்டி பகுதியில் ஆம்னி பேருந்து ஒன்று டிராக்டர் மற்றும் வேன் மீது மோதிய விபத்தில் உயிரிழந்த 4 பேரின் குடும்பத்திற்கும் தலா 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்த விபத்தில் பலத்த காயமடைந்தவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாயும், லேசான காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும் என்றும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

பங்களாதேஷில் தலைநகர் டாக்கா மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் பொதுக்கூட்டம், பேரணி மற்றும் போராட்டங்களை நடத்த அந்நாட்டு ராணுவம் தடை விதித்துள்ளது.

----------

போலந்து நாட்டில் அதிபர் தேர்தலுக்கான முதற்கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது.

----------

உத்தரப்பிரதேசத்தில் கத்ரினா காட் வனவிலங்கு சரணாலயத்தை கண்டுகளிக்கும் வகையில் **Vistadome** ரயில் சேவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

----------

விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் அருகே வாகன சோதனையின்போது 440 கிலோ போதைப்பொருளை பறிமுதல் செய்த காவல்துறையினர் 2 பேரை கைது செய்தனர்.

----------

கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை அருகே உள்ள ஆதிதிராவிடர் நல நடுநிலைப்ப பள்ளியில் வளர்ச்சித் திட்டப் பணிகளை ஆட்சியர் திருமதி அழகுமீனா ஆய்வு செய்தார்.

----------

அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டி கல்லாத்தூர் இடையிலான சாலையை சீரமைக்க வலியுறுத்தி மக்கள் நடைபணமாக சென்று புறவழிச்சாலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

----------

நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் இயங்கி வந்த கலைமகள் சபாவில் பணம் செலுத்திய முதலீட்டாளர்கள் அதனைத் திரும்பப் பெறுவதற்கு இணையதளம் மூலம் விண்ணப்பிக்குமாறு தமிழக அரசின் பத்திரப்பதிவுத்துறை தலைவர் திரு. தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

----------

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் திருக்குறளின் சிறப்புகளை எடுத்துரைக்கும் விதமாக நாள்தோறும் ஒரு குறள் உரிய விளக்கத்துடன் காட்சிப்படுத்த வேண்டும் என்று தொழிலாளர் உதவி ஆணையர் திரு. மூர்த்தி வலியுறுத்தியுள்ளார்.

----------

ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட நைஜீரியாவைச் சேர்ந்த கால்பந்து வீரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

----------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பள்ளி வாகனங்களை ஆய்வு செய்த ஆட்சியர் திருமதி சந்திரகலா, வாகன ஓட்டுநர்கள் பொறுப்புடன் பணியாற்ற வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார்.

----------

19 வயதுக்குட்பட்டோருக்கான தெற்காசிய கால்பந்துப் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

அருணாச்சல்பிரதேசத்தில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

--------------

ஐபிஎல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டத்தில் ராஜஸ்தான் - பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

ஜெய்ப்பூரில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

தில்லியில் இரவு மணி 7.30க்கு நடைபெற உள்ள மற்றொரு ஆட்டத்தில் தில்லி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தா – பெங்களூரு அணிகளுக்கு இடையே நேற்று நடைபெற இருந்த ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

--------------

உலகக் கோப்பை டேபிள் டென்னிஸ் சாம்பியன் இறுதிப்போட்டியில் இந்தியாவின் **Ayhika Mukherji – Sutirtha Mukherji** இணை இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

**<<<<>>>>**